This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# விபரீதக் கோட்பாடு

www.writersujatha.com

1

**கோ**ர்ட்டிலிருந்து என் ஆபீசுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன்.

மாலை. அந்தக் கார் சந்தையே அடைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தது. அருகில் சென்றதும், அது என் ஆபீசின் எதிரேதான் நிற்கிறது என்பது தெரிந்தது.

புதிய கேஸ்!

மெலிதான பச்சைவர்ண வண்டி. வெளிதேசச் சரக்கு. அமெரிக்காவில்தான் இப்படி கார்களுக்குப் பதிலாக தேர்கள் செய்வார்கள். எஸ்.டி.சி. வழியாக ஏலத்தில் வாங்குவதற்கு ஒன்றரை 'லக'ரமாவது (1980ல்) ஆகியிருக்கும்.

உள்ளே சுத்தமாக ஒரு கை ரம்மியாடலாம். அவ்வளவு இடம். பின் ஸீட்டில் உட்கார்ந்தால் டிரைவரைப் பார்ப்பதற்கு பைனாகுலர் தேவைப்படுமோ எனத் தோன்றியது. ரேடியோ இருந்தது. ஏர் கண்டிஷன் இருந்தது. மற்றொரு சமாசாரம். நம்பர் ப்ளேட்டுக்கு மேலே குரோமியப் பளபளப்பில் ஒரு சின்னம்.

உள்ளே நுழைந்தேன்.

காருக்குள் அல்ல, என் ஆபீசிற்குள்.

வசந்த் அந்தப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தான். மற்றொரு இளைஞன் மௌனமாக உட்கார்ந்திருந்தான். வசந்த் அந்தப் பெண்ணுடன் இன்ஸ்டண்ட் காதல் கொண்டுவிட்டான் என்பது அவன் பரிவான பார்வையிலிருந்து தெரிந்தது. வசந்தின் காதல்கள் தினசரி மாறும்.

என்னைப் பார்த்ததும் சற்று ஏமாற்றத்துடன், "வந்துவிட்டார்," என்றான். "மிஸ் தருணா, திஸ் இஸ் மிஸ்டர் கணேஷ்," என்று அந்தப் பெண்ணுக்கு என்னை அறிமுகப்படுத்தினான்.

"ஹாய்," என்றாள்.

வசந்த் அந்த இளைஞனைப் பார்த்து, "ஸாரி! உங்கள் பெயர் மறந்துவிட்டது," என்றான்.

"சாமிநாதன்." என்றான் சாமிநாதன்.

"ஹலோ! உள்ளே வாருங்களேன்," என்றேன். அந்தப் பெண் என்னையே வைத்த கண் வாங்காமல் பார்க்க, என் காலருக்குள் குறுகுறுத்தது. "ஸாரி ஆபீஸ் சுத்தமாக இல்லை," என்று இரண்டு புத்தக தலையணைகளையும் காப்பிக் கோப்பைகளையும் விலக்கி அவர்களுக்கு ஒரு வழியாக உட்கார இடம் பண்ணிக் கொடுத்தேன்.